**தென்னை மகசூலைக் கூட்டும் ஆந்தைகள்!**



தென்னையில் அதிக சேதத்தை ஏற்படுத்தும் எலிகளையும், காண்டாமிருக வண்டுகளையும் அழிக்க வழியே இல்லையா? என ஆதங்கப்படும் விவசாயிகள்தான் இங்கே அதிகம். இவர்களுக்கெல்லாம் நம்பிக்கை தரும்விதமாக, உயிர்ச்சூழல் முறையில் ஆந்தைகள் மூலமாகவே எலிகளையும் காண்டாமிருக வண்டுகளையும் கட்டுப்படுத்தி விடலாம் என்கிறார் நாகப்பட்டினம் மாவட்டம், கீவளூர் தாலுகா, வேட்டைகாரன் இருப்பு கிராமத்தைச் சேர்ந்த ராஜசேகரன். இவர், ஏற்கனவே நமக்கு அறிமுகமானவர்தான், புன்னை எண்ணெய் மூலம் மோட்டார் இயக்கி, தண்ணீர் பாசனம் செய்து வருவது பற்றிய கட்டுரை முன்பு பசுமை விகடனில் வெளியாகியிருக்கிறது.

எனக்கு ஏழு ஏக்கரில் தென்னை இருக்கு. அதில் எலியும், காண்டாமிருக வண்டும் கொடுத்த தொல்லை சொல்லி மாளாது. குரும்பை வைக்கும் போதே எலி கடிச்சுப் போட்டுவிடும். அதே மாதிரி தென்னங்குருத்தையெல்லாம், காண்டாமிருக வண்டுங்க பதம் பார்த்துவிடும். எவ்வளவு வீரியமான மருந்தை வைத்தாலும், இரண்டையும் ஒழிக்கவே முடியாது. அதனால் ஏகப்பட்ட பாதப்பு. கிடைக்க வேண்டிய மகசூலில் பாதியளவுக்கு வீணாகத்தான் போய்கிட்டிருந்தது.

முன்பெல்லாம் தென்னந்தோப்புக்குள்ள ஏகப்பட்ட ஆந்தைங்க இருக்கும். ராத்திரி நேரத்தில் மட்டும் வெளியில் வரும் ஆந்தைகள், எங்க ஒளிந்திருந்தாலும், எலியைப் பிடித்துத் தின்றுவிடும்.

காண்டாமிருக வண்டுகளையும் காலி பண்ணிடும். இப்போவெல்லாம் ஆந்தைகளோட நடமாட்டமெ குறைந்து போய் விட்டது. பொதுவாக, 50 வயதிற்கு மேல் இருக்கும் பெரிய மரங்களோட பொந்துகளுக்குள்ளதான் ஆந்தைங்க வசிக்கும். இப்போ அந்த மாதிரி மரங்களையெல்லாம் தோட்டத்தில் விட்டு வைப்பதேயில்லை. அதுவும் இல்லாமல்.. ஆந்தை கத்தினால் கெட்ட சகுனம் என்று மூடநம்பிக்கை வேற இருக்கு. அதனாலேயே ஆந்தையை அடித்து துரத்தும் பழக்கமும் இருக்கு. அதனால்தான் ஆந்தைகளோட எண்ணிக்கை படிப்படியா குறைந்து கொண்டே வருது. ஆனால், இந்த எலி, காண்டாமிருக வண்டுகளை ஒழிக்க ஆந்தைகள் விட்டால் வேற வழியில்லைனு தீர்மானித்து நான், ஆந்தைகளை தோப்புக்குள்ள எப்படியாவது பெருக்கணும் என்று முடிவு பண்ணினேன்.

**பமைமரக் கூடு**

என்னோட தோப்பில் 30 வயதுக்கு மேற்பட்ட மரங்கள் நிறைய இருக்கு. ஆனாலும், அதில் பொந்துகள் கிடையாது. சுத்துப்பட்டிலும் வயதான மரங்களே கிடையாது. அதனால் பனைமரத்தை வெட்டி, மாமரக் கிளைகளுக்கு இடையில் வைத்து, அதில் ஆந்தைகள் வந்து போகிற மாதிரியான சூழலை உருவாக்கினேன். இதுமாதிரி பல இடத்தில் வைத்து விட்டேன். ஒரே வாரத்தில் தானாவே ஆந்தைகள் வந்து தங்க ஆரம்பித்தது. ஒரு மாதத்திற்குள் முட்டை போட்டு குஞ்சுகளே உருவாகிடுச்சு. நான் வைத்திருந்த பனை மரத்தில் காற்றோட்டத்துக்காகவும், எச்சங்களை வெளியேத்தறதுக்காகவும் ஆந்தைங்களே சின்னச்சின்ன துளைகளைப் போட்டுகிட்டதுதான் ஆச்சர்யம். அதோட ராத்திரியில் எலிகளை வேட்டையாடவும் ஆரம்பிச்சுடுதுங்க. ஆந்தைகளோட எச்சங்களில் எலிகளோட எலும்பு முழுசாக் கிடப்பதை வைத்தே அதைக் கண்டுபிடித்தேன்.

இந்த மாதிரி அமைப்பை உருவாக்கி ஐந்து வருடம் ஆச்சு. இப்போ சுத்தமா எலிகளோட தொல்லையே இல்லை. அதே மாதிரி காண்டாமிருக வண்டுகளும் இல்லை. என்னோட தோப்பில் மட்டுமில்லாமல், ஒன்றரை கிலோ மீட்டர் சுற்றளவில் இருக்கும் தோப்புகளிலும் இந்தப் பிரச்சனைகள் இப்போ இல்லை. அதோட தோட்டத்தைக் காவல் காக்கும் வேலைகளையும் ஆந்தைகளே செய்கிறது. ராத்திரி நேரத்தில் தோட்டத்திற்குள் யாராவது நுழைந்தால் சத்தம் போட்டு நம்மை உஷார்படுத்திவிடும்.

ஆந்தைகளுக்கான இருப்பிடங்களை அமைப்பதற்கு பனை மரங்களின் நுனிப்பகுதி அல்லது சிமென்ட் குழாய்களைப் பயன்படுத்தலாம். உட்பகுதி சற்று சொர சொரப்பாக இருப்பதால், ஆந்தையின் முட்டைகள் உருண்டு விடாமல் இருக்கும். தவிர, இவை எப்போதும் குளிர்ச்சியாகவே இருப்பதால்.. ஆந்தைகள் இவற்றில் விரும்பி வசிக்கின்றன. நீளம் குறைவாக இருக்கும் பொழுது அதிக வெளிச்சம் இருக்கும் என்பதால், குறைந்தது பத்து அடி நீளமுள்ள பனை அல்லது சிமென்ட் குழாய்களைத்தான் பயன்படுத்த வேண்டும். இவற்றின் விட்டம் அரை அடியிலிருந்து முக்கால் அடி வரை இருக்கலாம். அப்போதுதான் ஆந்தைகள் சுலபமாக வந்து செல்லும். மாமரம், வேப்பமரம், ஆலமரம், அரசமரம், புன்னை போன்ற அதிக நிழல் தரும் மரங்களில் இவற்றை அமைக்கலாம். நமது தோட்டத்தில் மரங்கள் இல்லையென்றால், அருகே உள்ள மற்ற விவசாயியின் மரங்களில் கூட அனுமதி பெற்று அமைக்கலாம்.வடக்கு தெற்காக இருக்க வேண்டும்.

ஒரு மரத்தில் அமைக்கப்படும் பொந்து மூலமாக ஆந்தைகளை வரவழைத்து ஏறத்தாழ 10 ஏக்கர் அளவிலான தென்னந்தோப்பை எலிகள் மற்றும் காண்டாமிருக வண்டுகளிடம் இருந்து பாதுகாத்துவிட முடியும். சிமென்ட் குழாயாக இருந்தால், பக்கவாட்டில் காற்றோட்டத்திற்காக இரண்டு துளைகளையும் அடிப்பகுதியில் எச்சங்களை வெளியேற்ற, ஒரு சிறிய துளையையும் அமைக்க வேண்டும். பனைமரமாக இருந்தால், இத்துளைகளை ஆந்தைகளே அமைத்துக் கொள்கின்றன. நிழல் தரும் மரங்களில் 10 அடி உயரத்திற்க்கு மேலே உள்ள கிளைகளில்தான் செயற்கை முறையில் பொந்தை அமைக்க வேண்டும். கீழே விழுந்துவிடாத அளவுக்கு கிளைகளோடு இணைந்த உறுதியாக இறுக்கிக் கட்ட வேண்டும். படுக்கை நிலையில், சமமான நேர்க்கோட்டில் இருக்க வேண்டும். இதில் ஏதாவது ஒரு முனை சற்று மேலே தூக்கி இருந்தாலும், வெளிச்சம் மற்றும் மழை நீர் உள்ளே வந்துவிடும். அதே போல் சூரிய ஒளி உள்ளே வந்து விடாத அளவுக்கு வடக்கு தெற்காகத்தான் அமைக்க வேண்டும். என்று தெளிவாக விவரித்தார்.

**தொடர்புக்கு** :

ராஜசேகரன் , அலைபேசி :97510 -02370

---

**ஆதாரம்:** பசுமை விகடன் வெளியீடு 25.06.11 www.vikatan.com